S.T.C. No. : 62/2023

தேதி : 26.02.2024

பெயர் : தேவராஜ்

த.பெ. : சடையாண்டி

பு.சா : 1

**பு.சா.1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் பத்தாம் வகுப்புவரை படித்துள்ளேன். இந்த புகார் மனுவில் கண்டுள்ள சங்கதிகள் பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும் புகார்மனுவில் எதிரியும் நீங்களும் நெருங்கிய நண்பர்கள் என்று சொல்லியூள்ளீர்கள் என்றால் சரிதான். எத்தனை ஆண்டு காலம் நெருங்கிய நண்பர்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.
2. எந்த வகையில் எப்படி, நண்பர் ஆனீர்கள் என்று புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நீங்களும் எதிரியும் ஒன்றாக பள்ளிப்படிப்பு படித்துள்ளீர்களா என்றால் இல்லை.உங்களுடைய ஊர் தோட்டிலோவன்பட்டி என்றால் சரிதான். எதிரி வசித்து வருவது கோவில்பட்டி என்றால் சரிதான்.
3. எதிரியும் நீங்களும் ஒரே தொழில் செய்து வருபவர்களா என்றால் இல்லை. நீங்களும் எதிரியும் நெருங்கிய நண்பர்களாக இருக்கும் பட்சத்தில் ஒருவர் வீட்டு ஒருவர் விசே ஷத்தில் கலந்துகொண்டதற்கான புகைப்படம் உள்ளதா என்றால் இல்லை. வேறு ஏந்த வகையிலாவது நீங்களும் எதிரியும் சேர்ந்து இருக்கின்ற புகைப்படம் இருக்கிறதா என்றால் இல்லை.
4. புகார்மனுவில கூறியபடி நீங்களும் எதிரியும் நெருங்கிய நண்பர்கள் என்பதை காட்டக்கூடியஆவணம் எதுவும் இ்ல்லை என்றால் சரிதான். எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் பற்றி விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார்மனுவில் நீங்கள் என்ன தொழில் செய்கீறிர்கள்என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். உங்களுடைய மாத

வருமானம் எவ்வளவு, மற்றும் உங்களுடைய பொருளாதார நிலை பற்றி மனுவில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்ற விபரம் மனுவில் உள்ளதா என்றால் இல்லை. எதிரியின் பொருளாதார நிலை பற்றி மனுவில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.எதிரிக்கு நீங்கள் இதற்கு முன்புஎதிரிக்கு கடன் கொடுத்து வாங்கியதற்கான சங்கதிகள் எதுவும் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் என்ன தொழில் செய்கீறிர்கள் என்றால் தீப்பெட்டி கம்பெனி நடத்தி வருகிறேன். தீப்பெட்டி கம்பெனி என்றால் வாங்கி விற்கிறீர்களா அல்லது தயாரிக்கிறீர்களா என்றால் தயாரிக்கிறேன்.
6. உங்கள் தீப்பெட்டி கம்பெனியின் பெயர் என்ன என்றால் அருண் மேட்ச் ஒர்க்ஸ். அப்படியொரு தீப்பெட்டி கம்பெனி உள்ளதை காட்டக்கூடிய ஆவணங்களை அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் உள்ளேன். அந்த கம்பெனியின் உரிமையாளர் நீங்கள் தான் என்றால்சரிதான். சுமார் எத்தனை ஆண்டுகாலமாக தீப்பெட்டி கம்பெனி இயங்கிவருகிறது என்றால் சுமார் 7 ஆண்டு காலம் இருக்கும்.தீப்பெட்டி கம்பெனிக்குஆண்டுதோறும் வரவு செலவு கணக்குகளை காட்டுவது உண்டா என்றால் உண்டு. அது ஒவ்வொரு வருடமும் மார்ச் 31ம்தேதிக்குள் கணக்கினை காட்டுவீர்களா என்றால் ஆமாம்.உங்களுடைய ஜீவனம் மற்றும் செலவிற்கான ஆதாரம் மேற்படி கம்பெனியிலிருந்து வருகிறது என்றால் சரிதான்.
7. அந்த வகையில் நீங்கள் கம்பெனி அபிவிருத்திக்காக வெளியில்கடன் வாஙகியிருந்தாலோ அல்லது பிறருக்கு கொடுத்திருந்தாலோ அந்த விவரம் அதில் காட்டப்பட்டு இருக்கும் என்றால் சரிதான். எதிரி உங்களை எந்ததேதியில் சந்தித்தார் என்றால் 10 வது மாதம் 2022 வருடம் தேதி ஞாபகம் இல்லை. உங்களுடைய புகார்மனுவில் எதிரி எங்கு வைத்து சந்தித்தார் என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார்மனுவில் காணப்படக்கூடிய சங்கதிகளை பொறுத்து ரூ2,75,000/– உங்களுக்கு சாதாரண தொகையா அல்லது பெரிய தொகையா என்றால் பெரிய தொகை தான்.
8. பொதுவாக ஒரு நபரிடம் யாராவதுகடன் கேட்டால் அந்த நபரின் கடன் தேவைக்கான காரணத்தை தெரிந்து கொண்டு தான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான்.ஆனால் எதிரியிடம்

நீங்கள் என்ன தேவைக்காக கடன் கேட்டதாக சொல்லவில்லை என்றால் குடும்ப செலவிற்கு கேட்டதாக சொல்லியுள்ளேன். அவர் அவ்வாறு கேட்ட போது எதிரியின் பொருளாதார நிலை என்ன என்று தெரியுமா என்றால் தெரியும். எதிரி எப்படி இருந்தார் என்றால் வசதியாக தான் இருந்தார். ஒரு வசதியான நபர் குடும்ப செலவிற்கு பணம் கேட்டதால் உங்களுக்கு சந்தேகம் வந்ததா என்றால் வரவில்லை. எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் உங்களுக்கு பழக்கம் என்றால் எதிரியின் மனைவி மற்றும் தாயாரை தெரியும் எதிரியின் வீட்டிற்கு போய்வரும் பழக்கம் உண்டா என்றால் அடிக்கடி போய்வந்துள்ளேன்.

9. எதிரி கடன் கேட்டபோது அவருக்கு கடன் கொடுக்காலாமா வேண்டாமா என்று அவரின் குடும்ப உறுப்பினர்களிடம் கேட்டீர்களா என்றால் இல்லை. பொதுவாக கடன் கொடுப்பவர்கள் கடனுக்கு ஈடாக கடனுறுதிசீட்டு எழுதி வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். அந்த மாதிரி எதிரியிடம் கடனுறுதிசீட்டு எழுதி கொடுங்கள் என்று கேட்காததற்கு தனிப்பட்ட காரணம் உண்டா என்றால் நம்பிக்கையான நபர் என்பதால் கேட்கவில்லை.எதன் அடிப்படையில் எதிரி நம்பிக்கையான நபர் என்று முடிவு செய்தீர்கள் என்றால் பேச்சுவார்த்தை மற்றும் பழக்கத்தின்அடிப்படையில் .

10. எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் பட்டாசு தொழில் செய்து வருகிறார். அவருடைய கடையின்பெயர் தெரியுமா என்றால் பைவ் ஸ்டார். அவருடைய கடையின் வரவு செலவு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எதிரியை எதிரியின் கடைக்கு பட்டாசு வாங்க போன வகையில் பழக்கம். எதிரியின் வங்கியின் இருப்பு தொகை மற்றும் வரவு செலவு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் குடும்ப செலவு மற்றும் வரவு செலவு மற்றும் சொத்துகளை பற்றி உங்களிடம் கலந்தலோசித்ததாக உங்கள் மனுவில சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

11. பொதுவாக தொழில் செய்பவர்கள் கையில் பணம் இருப்பு வைத்திருப்பது இல்லை என்றால் சரிதான். அதேபோன்று எதிரியும் நீங்களும் உங்கள் தொழில் இருந்திருப்பீர்கள் என்றால் சரிதான். எதிரி உங்களிடம் கடன் கேட்டது கண்ணுற்றுதற்கான வேறு சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். அவர் கடன் கேட்டு எவ்வளவு நாட்கள் கழித்து

கொடுத்தீர்கள் என்றால் 2,3 நாட்கள் கழித்து கொடுத்தேன். ரூ2,75,000/-த்தை எந்த முறையில் கொடுத்தீர்கள் என்று உங்கள் மனுவில் இல்லை என்றால் சரிதான். அதே போன்று எங்கு வைத்துகொடுத்தீர்கள் என்றவிவரமும் இல்லை என்றால் சரிதான். அந்த பணத்தை எப்படி கொடுத்தீர்கள் என்றால் ரொக்க பணமாக தான் கொடுத்தேன். கடன் கொடுத்த விபரம் உங்களுடைய வியாபார வரவு செலவு விபரத்தில் காட்டியுள்ளீர்களா என்றால் இல்லை. எதிரிக்கு யாரிடம் வாங்கி கொடுத்தீர்கள் என்றால் எனது மனைவியிடம் வாங்கி கொடுத்தேன். உங்கள் மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் எனது தொழிற்சாலையில் மேற்பார்வை வேலை செய்கிறார். தொழிலளார் சட்டத்தின்படி உங்கள் மனைவியின் பெயர் தொழிற்சாலையில் ஊழியர் என்ற முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உங்கள் மனைவிக்கு பணி நியமன ஆணை கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. தீப்பெட்டி கம்பெனியின் வருகைபதிவேட்டில் உங்களின் மனைவியின்பெயர் உள்ளதா என்றால் இல்லை. உங்களுடைய மனைவி உங்களுடைய தீப்பெட்டி கம்பெனியில் வேலை பார்த்துவருகிறார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Fast Track Court (ML) Kovilpatti.(FAC)